**ஆகஸ்ட் – 23**

# TNPSC துளிகள்

- இந்திய அறிவியலாளர்கள் RK-251 என்ற ஸ்மார்ட் புற்றுநோய் மருந்தை உருவாக்கி உள்ளனர் என்பதோடு இது புற்றுநோய் செல்களுக்குள் நேரடியாகச் செயல்படுவதால் ஆரோக்கியமான செல்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்க உதவுகிறது.
  - மேம்பட்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனம் (IASST) மற்றும் கவுகாத்தி இந்திய தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றின் அறிவியலாளர்களால் உருவாக்கப் பட்ட இந்த மருந்தானது, புற்றுநோய் செல்களில் உள்ள அதிக எதிர் வினை ஆக்ஸிஜன் இனங்களின் (ROS) அளவுகளால் செயல்படுத்தப்பட்டு, NBDHEX என்ற புற்றுநோய் எதிர்ப்புச் சேர்மத்தை வெளியிடுகிறது.
- சீனாவின் தனியார் விண்வெளி நிறுவனமான லேண்ட்ஸ்பேஸ் (LandSpace) தனது ஜூக்-3 (Zhuque-3) சுற்றுப்பாதை ராக்கெட்டின் முதல் கட்டத்தை வெற்றிகரமாக மீட்டெடுத்து உள்ளது.
- அடுத்த ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பொதுச் செயலாளருக்கான வேட்பாளராக ஈக்வடார் நாட்டு தூதர் இவோன் பாக்கியை (Ivonne Baki) டோங்கா (Tonga) நாடு பரிந்துரைத்துள்ளது.
- புகைப்படக் கலைஞர்களையும், முக்கிய தருணங்களைப் பாதுகாப்பதில் புகைப்படக் கலையின் பங்கையும் அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 19 அன்று உலக புகைப்பட தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான இதன் கருத்துரு HOME என்பதாகும்.
- பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களை கௌரவிக்கவும், நினைவுகூரவும், அஞ்சலி செலுத்தவும் மற்றும் அவர்களது மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 21 அன்று பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூரும் மற்றும் அஞ்சலி செலுத்தும் சர்வதேச விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப் படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான இதன் கருத்துரு Healing through Memory என்பதாகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு இணையவழி குற்றப் பிரிவு மையம்

- சென்னையில் உள்ள இணையவழி குற்றத் தடுப்பு தலைமையகத்தை தமிழ்நாடு மாநில இணையவழி குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மையமாக (TN-S4C) தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.
- இந்த மையமானது இணையவழிக் குற்ற வழக்குகளில் மத்திய மற்றும் மாநில சட்ட அமலாக்க முகவர் நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பிற்கான மாநில தொடர்பு முகமையாக செயல்படும்.
- இணையக் குற்றங்களைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் விசாரித்தல் ஆகியவற்றுடன் வழக்குத் தொடர ஆதரவு மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கு இது துணை புரியும்.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதியிட்ட உச்ச நீதிமன்றத்தின் தாமாக முன்வந்து வழக்கெடுக்கும் (suo motu) பேராணை உத்தரவைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, குறிப்பாக "டிஜிட்டல் கைது" (Digital Arrest) வழக்குகளின்

ஒருங்கிணைப்பு தொடர்பாக இது செயல்படும்.

- ❖ இத்தகைய மையங்களை மாநில அளவிலான தொடர்பு முகமைகளாக நிறுவுமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) உத்தரவிட்டிருந்தது.
- ❖ TN-S4C அமைப்பானது நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, உளவுத்துறை பகிர்வு, திறன் மேம்பாடு மற்றும் இணையத் தடயவியல் ஆதரவு ஆகியவற்றை எளிதாக்கும்.




## தேசியச் செய்திகள்

### PNG இணைப்பு ஊக்குவிப்பு திட்டம்




- ❖ இந்தியா முழுவதும் உள்நாட்டு குழாய்வழி இயற்கை எரிவாயு (PNG) இணைப்புகளை விரைவுபடுத்துவதற்கான ஊக்குவிப்பு திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து உள்ளது.
- ❖ இத்திட்டம் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் தொடங்கப்பட்டு, நகர எரிவாயு விநியோக (CGD) நிறுவனங்கள் மூலம் வீடுகளுக்கான PNG இணைப்புகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தியாவில் தற்போது 1.74 கோடி அளவிலான உள்நாட்டு PNG இணைப்புகள் உள்ளன.

- தகுதியான CGD நிறுவனங்கள், பகுதி சார்ந்த வரம்பிற்கு மேல் வழங்கப்படும் ஒவ்வொரு கூடுதல் கட்டண இணைப்பிற்கும் குறைந்த விலையிலான உள்நாட்டில் நிர்வகிக்கப் படும் விலை முறை (APM) எரிவாயுவில் கூடுதலாக 200 தரநிலை கன மீட்டர்களை (SCM) பெறும்.
- இத்திட்டம் இரண்டு கட்டங்களாக தலா ஆறு மாதங்களுக்கு செயல்படுத்தப்படும் என்பதோடு மேலும் PNG இணைப்புகளுக்கான முதலீட்டை திரும்பப் பெறும் காலத்தை சுமார் 10 ஆண்டுகளில் இருந்து சுமார் 3 ஆண்டுகளாகக் குறைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- தேசிய PNG திட்டம் 2.0, விரைவான ஒப்புதல்கள், தரப்படுத்தப்பட்ட வழி உரிமை (RoW) கட்டணங்கள் மற்றும் புதிய PNG இணைப்புகளுக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளம் ஆகியவை பிற நடவடிக்கைகளில் அடங்கும்.

## 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மாற்றுத்திறனாளிகள் பிரிவுகள்





- 2016 ஆம் ஆண்டின் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் (RPwD) சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப் பட்ட அனைத்து 21 குறைபாடுகளையும் தனித்தனியாக பதிவு செய்வதற்குப் பதிலாக, 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு வினாத்தாள் 9 பரந்த குறைபாடு வகைகளை மட்டுமே முன்மொழிகிறது என்று மாற்றுத் திறனாளிகள் உரிமை குழுக்கள் கவலை தெரிவித்துள்ளன.
- பார்வை, செவித்திறன், பேச்சு, இயக்கம், அறிவுசார் குறைபாடு, மனநல பாதிப்பு, அமிலத் தாக்குதல், நாள்பட்ட நரம்பியல் நோய் மற்றும் இரத்தக் கோளாறு ஆகியவை முன்மொழியப்பட்ட வகைகளில் அடங்கும்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பானது ஆறு குறைபாடு வகைகளின் அடிப்படையில் இந்தியாவின் மக்கள் தொகையில் 2.21% ஆக உள்ள 2.68 கோடி மாற்றுத் திறனாளிகளைப் பதிவு செய்தது.
- 2016 ஆம் ஆண்டின் RPwD சட்டமானது ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாடு, குறிப்பிட்ட கற்றல் குறைபாடு, குள்ளத்தன்மை மற்றும் பல குறைபாடுகள் உட்பட அங்கீகரிக்கப் பட்ட குறைபாடுகளை 7-இல் இருந்து 21 ஆக விரிவுபடுத்தியது.

- இந்த ஒன்பது வகைகளும் குறிப்பிட்ட குறைபாடுகளை உள்ளடக்கிய பரந்த குழுக்கள் என்றும், தீவிரத்தின் அடிப்படையில் மூன்று குறைபாடுகள் வரை பதிவு செய்ய வினாத் தாள் அனுமதிக்கிறது என்றும் இந்திய தலைமைப் பதிவாளர் அலுவலகம் (ORGI) தெரிவித்துள்ளது.

## மரண தண்டனை குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- மரண தண்டனையை நிறைவேற்றும் முறையாக தூக்கிலிடுவதன் அரசியலமைப்பு செல்லுபடியாகும் தன்மையை உச்ச நீதிமன்றம் நிலைநிறுத்தியுள்ளது, இது சரத்து 21 அல்லது கண்ணியத்திற்கான உரிமையை மீறவில்லை என்று தீர்ப்பளித்துள்ளது.
- தூக்கிலிடுவதை நிலைநிறுத்திய தீனா மற்றும் இந்திய ஒன்றியம் வழக்கு (Deena v. Union of India) இடையேயான 1983 ஆம் ஆண்டு தீர்ப்பை நீதிமன்றம் சுட்டிக் காட்டி உள்ளது, மேலும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதாவின் (BNSS) பிரிவு 393(5)-இன் கீழ் நாடாளுமன்றம் தூக்கிலிடுவதைத் தக்க வைத்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளது.
- மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு தண்டனை நிறைவேற்றப்படும் போது கூட அரசியலமைப்பு பாதுகாப்பு தொடர்கிறது என்றும், நீண்ட-துளி (long-drop) முறையானது கண்ணியத்துடன் மற்றும் மிருகத்தனம் அல்லது சீரழிவு இல்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- சட்ட ஆணையத்தின் 187 வது அறிக்கை (2003) ஒரு மாற்று முறையாக கொடிய ஊசியை (lethal injection) பரிந்துரைத்தது, ஆனால் அத்தகைய பரிந்துரைகள் நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்தாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.
- முந்தைய தீனா வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையை புதிய அறிவியல் அல்லது அனுபவ சான்றுகள் அடிப்படையில் மாற்றினால், எதிர்கால மறுபரிசீலனைக்கு இந்த சிக்கலை நீதிமன்றம் திறந்து வைத்துள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## 2026 ஆம் ஆண்டு பிரிக்ஸ் இளைஞர் ஆற்றல் உச்சி மாநாடு

- 8-வது பிரிக்ஸ் இளைஞர் ஆற்றல் உச்சி மாநாட்டை இந்தியா தனது பிரிக்ஸ்

தலைமையின் கீழ் காணொளி வாயிலாக தொகுத்து வழங்கியது.

- இந்த உச்சி மாநாடு ஆற்றல் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை, ஆற்றல் அணுகல் மற்றும் சமத்துவம், மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புதுமை ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- இதன் கருத்துரு Energy for All என்பதாகும்; இந்தியாவின் பரந்த பிரிக்ஸ் தலைமையின் கருத்துரு "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability" என்பதாகும்.
- ஆற்றல் பல்வகைப்படுத்தல், நெகிழ்வான விநியோகச் சங்கிலிகள், புதுமையான நிதியளிப்பு மற்றும் ஆற்றல் அமைப்புகளின் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவை குறித்த விவாதங்கள் இடம் பெற்றன.
- இந்த உச்சி மாநாட்டைத் தொடர்ந்து குஜராத்தின் காந்திநகரில் பிரிக்ஸ் இளைஞர் சபைக் கூட்டம் மற்றும் இளைஞர் உச்சி மாநாடு நடைபெற்றது.




## பிரிக்ஸ் சுற்றுலா பணிக்குழு கூட்டம்





- இந்தியாவின் பிரிக்ஸ் தலைமையின் கீழ் ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் 2-வது பிரிக்ஸ் 2026 ஆம் ஆண்டு சுற்றுலா பணிக்குழு கூட்டம் நடைபெற்றது.
- இக்கூட்டம் இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்தால் தொகுத்து வழங்கப்பட்டது.
- இந்தியாவின் கருத்துருவான "Building for Resilience, Innovation, Cooperation and Sustainability" என்பதில் இது கவனம் செலுத்தியது.

- செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் சுற்றுலா, நிலையான மற்றும் பொறுப்பான சுற்றுலா, சுற்றுலா திறன் மற்றும் திறன் மேம்பாடு, மற்றும் சுற்றுலா பரிமாற்றங்கள் மற்றும் தடையற்ற பயண வசதி ஆகிய நான்கு முன்னுரிமைப் பகுதிகள் விவாதிக்கப் பட்டன.
- இது 2026 ஆம் ஆண்டு மே 25 அன்று காணொளி வாயிலாக நடைபெற்ற 1 வது பிரிக்ஸ் 2026 ஆம் ஆண்டு சுற்றுலா பணிக்குழு கூட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்றது.
- அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பிரிக்ஸ் சுற்றுலா அமைச்சர்கள் கூட்டத்தில் ஜெய்ப்பூர் பிரகடனம் எனப்படும் 2026 ஆம் ஆண்டு பிரிக்ஸ் சுற்றுலா அமைச்சர்களின் அறிக்கை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- செயற்கை நுண்ணறிவால் (AI) செயல்படுத்தப்படும் சுற்றுலா, நிலையான சுற்றுலா, திறன் மேம்பாடு மற்றும் தடையற்ற பயணம் ஆகியவற்றில் ஒத்துழைப்புக்கான கட்டமைப்பை ஜெய்ப்பூர் பிரகடனம் வழங்குகிறது, அதே நேரத்தில் சுற்றுலா முதலீடு, உள்கட்டமைப்பு மற்றும் மக்களுக்கிடையேயான பரிமாற்றங்களை ஊக்குவிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## மண்டல ஊரக வங்கிகள் கடன் வளர்ச்சி





- மண்டல ஊரக வங்கிகள் (RRBs) 2025-26 ஆம் நிதியாண்டில் மொத்தக் கடன்களில் ஆண்டுதோறும் (YoY) 10.3% வளர்ச்சியைப் பதிவு செய்து, முந்தைய ₹5.24 லட்சம் கோடியில் இருந்து ₹5.78 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளன.
- முன்னுரிமைத் துறை கடன் (PSL) இலக்கின் கீழ் அவற்றின் சராசரி சாதனை, ஒட்டு மொத்த இலக்கான 75%க்கு எதிராக, சரி செய்யப்பட்ட நிகர வங்கிக் கடனின் (ANBC) 91.7% ஐ எட்டியுள்ளது.
- மொத்த முன்னுரிமைத் துறைக் கடனில் (PSL) 77% ஆக உள்ள விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் ₹3.78 லட்சம் கோடியுடன் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளன.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSMEs) கடன் ₹66,978 கோடியாக உள்ளது, இதில் 95% க்கும் அதிகமானவை குறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- கிராமப்புறங்களில் நிதி உள்ளடக்கம் மற்றும் நிறுவன கடன்களுக்கான அணுகலை

ஆதரிக்கும் வகையில், நலிவடைந்த பிரிவினருக்கு மண்டல ஊரக வங்கிகள் ₹3.49 லட்சம் கோடியை வழங்கியுள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ICAR-NRCB - இரண்டு புதிய வாழை ரகங்கள்

- தமிழ்நாட்டின் திருச்சியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை - தேசிய வாழை ஆராய்ச்சி மையம் (ICAR-NRCB) காவேரி தங்கம் மற்றும் காவேரி நாடன் ஆகிய இரண்டு புதிய வாழை ரகங்களை வெளியிட்டுள்ளது.
- காவேரி தங்கம் என்பது வழக்கமான ரகங்களை விட கிட்டத்தட்ட 10 மடங்கு அதிக வைட்டமின் ஏ, மஞ்சள் நிற சதைப்பகுதி மற்றும் 15 நாட்கள் வரை சேமித்து வைக்கும் ஆயுட்காலம் கொண்ட ஒரு பிரீமியம்/உயர்வகை ரகமாகும்.
- காவேரி நாடன் ஒரு அதிக மகசூல் தரும் ரகமாகும் என்பதோடு இது ஹெக்டேருக்கு 75 டன்கள் வரை உற்பத்தி செய்யக் கூடியது, இது வழக்கமான ரகங்களின் மகசூலை விட கிட்டத்தட்ட இருமடங்காகும்.
- வாழை விவசாயிகளுக்கு நீரைச் சேமிக்கவும் மற்றும் பருவநிலை தொடர்பான சவால்களைச் சமாளிக்கவும் உதவும் வகையில் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் சென்சார் அடிப்படையிலான நீர்ப்பாசனத்தையும் ICAR-NRCB ஊக்குவிக்கிறது.
- மத்திய கிழக்கு நாடுகளுக்கு நேந்திரன் வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதற்கான தொழில் நுட்ப ஆதரவை இந்த மையம் வழங்கும், ஏற்றுமதி சார்ந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்காக நான்கு தொகுப்புகள் திட்டமிடப் பட்டுள்ளன.





# இதரச் செய்திகள்

## 2026 ஆம் ஆண்டு சத்பாவனா திவாஸ்

- முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையிலும், தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம், அமைதி மற்றும் நல்லெண்ணத்தை மேம்படுத்தும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் சத்பாவனா திவாஸ் (Sadbhavana Diwas) அனுசரிக்கப் படுகிறது.
- ராஜீவ் காந்தி 1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் தேதி மகாராஷ்டிராவின் பம்பாயில்

(தற்போதைய மும்பை) பிறந்த அவர் இந்திரா காந்தியின் மகனும் ஜவகர்லால் நேருவின் பேரனும் ஆவார்.

- இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு 1984 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி அவர் பிரதமரானார், மேலும் அந்தப் பதவியில் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதி வரை பணியாற்றினார்.
- தனது 40 வயதில், இந்தியாவின் மிக இளைய பிரதமராக ராஜீவ் காந்தி ஆனார்.
- அரசியலில் நுழைவதற்கு முன்பு, அவர் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் வணிக ரீதியான விமானியாகப் பணிபுரிந்தார்.
- கல்விக்கான அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்காக 1986 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை (NPE), அவரது பதவிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- குறிப்பாக கிராமப்புறங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக ஜவஹர் நவோதயா வித்யாலயா (JNV) அமைப்பு 1986 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- 1985 ஆம் ஆண்டின் 52வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் கட்சித் தாவல் தடைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது மற்றும் அரசியலமைப்பில் பத்தாவது அட்டவணையைச் சேர்த்தது.
- 1988 ஆம் ஆண்டின் 61வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் வாக்களிக்கும் வயதை 21 லிருந்து 18 ஆகக் குறைத்து, தேர்தலில் இளைஞர்களின் பங்கை அதிகரித்தது.
- டெல்லி மற்றும் மும்பையில் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக அவரது பதவிக்காலத்தில் 1986 ஆம் ஆண்டில் மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் (MTNL) நிறுவப் பட்டது.
- அவர் 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் தேதி தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீபெரும்புதூரில் ஒரு தேர்தல் பிரச்சாரத்தின் போது படுகொலை செய்யப்பட்டார்.
- அவருக்கு 1991 ஆம் ஆண்டில் இந்தியாவின் உயரிய சிவிலியன் விருதான பாரத ரத்னா மரணத்திற்குப் பின் வழங்கப்பட்டது.
- சத்பாவனா திவாஸ் என்பது உணர்வுபூர்வமான ஒற்றுமை, மத நல்லிணக்கம், அமைதியான சகவாழ்வு மற்றும் உரையாடல் மற்றும் அரசியலமைப்பு வழிகள் மூலம் வேறுபாடுகளைத் தீர்ப்பது ஆகிய மதிப்புகளை எடுத்துக்காட்டுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★